| | | |
|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | |

| மாவட்டம் : | மதுரை | காலம் : | 13/04/2022 | முதல் | 17/04/2022 |
|---|---|---|---|---|---|
| அறிக்கை எண் : | 029/ 2022 | வெளியீட்டு நாள் : | 12/04/2022 | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (08.04.2022 முதல் 11.04.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 17-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 08/04 | 09/04 | 10/04 | 11/04 | தேதி | நாள்-1 13/04 | நாள்-2 14/04 | நாள்-3 15/04 | நாள்-4 16/04 | நாள்-5 17/04 |
| 0.0 | 6.4 | 15.5 | 4.5 | மழை (மி.மீ) | 15 | 12 | 8 | 0 | 0 |
| 38 | 35 | 37 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 37 | 39 | 39 |
| 26 | 25 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 27 | 27 | 27 |
| 6 | 6 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 5 | 4 | 3 | 2 |
| 82 | 77 | 68 | 81 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 75 | 70 | 70 | 70 |
| 77 | 72 | 88 | 95 | | 60 | 60 | 50 | 50 | 50 |
| 6 | 8 | 4 | 1 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| தென் கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | தென்மே மேற்கு | தென்மே ற்கு | தென்மே மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 13, 14, 15 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது அதிகபட்ச வெப்பநிலையானது 36°- 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

தென்தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் ஏப்ரல் 13 தேதி கனமழை முதல் மிக கனமழையும் மற்றும் 14, 15 தேதி கனமழையும் பெய்வதற்கான வாய்ப்புள்ளது.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் ஏப்ரல் 13 முதல் 15 தேதி வரை இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம்மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கரும்பு, பருத்தி, கால்நடை.**

**கரும்பு:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் கரும்பு பயிரில் இளங்குருத்துப் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதலானது 1 முதல் 3 மாத வயதுடைய பயிர்களில் அதிகமாகக் காணப்படும். புழுக்கள் தோகை சேரும் இடத்தில் உள்ள இளந்தண்டுகளை துளைத்து உள்ளே சென்று உண்பதால் நடுக்குருத்து காய்ந்து விடும் இதனை இழுத்தால் எளிதில் வந்துவிடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 35மில்லி பிப்ரோனில் மற்றும் 10மில்லி ஒட்டும்பசை என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**பருத்தி:**

தற்போது நிலவும் சூழ்நிலையில் பருத்தி பயிரில் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் பிரச்சினை ஆங்காங்கே காணப்படுகிறது. இதனை சரிசெய்ய, பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள பருத்தி பயிரில் ஒரு ஏக்கருக்கு 2½ கிலோ என்ற அளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பருத்தி பிளஸ் எனும் வளர்ச்சி ஊக்கியினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைவழியாக தெளிக்க வேண்டும். இதன் மூலம் பூ மற்றும் பிஞ்சு உதிர்தல் குறைகிறது, காய் வெடிக்கும் தன்மை அதிகரிக்கிறது, பருத்தி விதை விளைச்சல் அதிகரிக்கிறது. மேலும் இது பருத்திச் செடிக்கு, வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும் கொடுக்கிறது.

கடந்த சில நாட்களாக, ஒரு சில இடங்களில் கோடை மழை பெய்துள்ளது. அடுத்த சில நாட்களுக்கும் மழை எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் தங்கள் நிலத்தில் கோடை உழவுப் பணியினை மேற்கொண்டு மழை நீர் வீணாகாமல் நிலத்தினுள் சேமிப்பதோடு, மண்ணில் மறைந்துள்ள பூச்சிகளின் முட்டைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை நிலத்தின் மேற்பரப்பிற்கு கொண்டுவந்து சூரிய ஒளியின் மூலம் அழிக்கலாம்.

**கால்நடை:**

தற்போது சிறிதளவு கோடைமழை பெய்துள்ள நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணத் தாக்குதல் குறித்து கண்காணித்து வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.